
உ

# ஔவையாரும், பாரி மகளிரும்



ஆக்கம். தொகுப்பு:- பொ.சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார்

பொ.சிவப்பிரகாசம்
கொழும்புத்துறை

"பாலும் தெளி தேனும் பாகும் பருப்பு மிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் – கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா"

– ஔவையார்

**பொருள்: –**

அழகு தரும் உயர்ந்த யானை முகத்தை உடைய தூய மாணிக்க விநாயகக் கடவுளே! பாலும், தேனும், வெல்லப்பாகும், பருப்பும் ஆகிய நான்கையும் கலந்து உனக்கு நான் நிவேதனம் செய்வேன். சங்கம் வளர்த்த இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் எனக்கு தந்து அருள்வீராக!

## சங்க கால ஔவையார்

தமிழகத்தில், கொங்கு நாட்டில், தருமபுரி என்னும் தகடூரில், பாணனுக்கும் அவன் மனைவி விறலிக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தையின் அழகான முகத்தில் அறிவொளி வீசியதைக் கண்ட பெற்றோர், அவளை ஔவை எனப் பெயரிட்டனர். வளர்ந்து வயது வந்த ஔவை தன் குடிப் பெருமைக்கு ஏற்ப, விறலியாகி ஆடலிலும், பாடலிலும் சிறந்து விளங்கினாள். ஔவையின் இல்லத்திற்கு அருகே பாணன் மகன் ஒருவன் இருந்தான். அவனும் யாழ், மத்தளம், தடாரி வாசிப்பதில் சிறந்தவனாக இருந்தான். ஔவை ஆடச் செல்லும் போது எல்லாம், ஔவைக்கு துணையாக கூடச் சென்றான். அரச சபைகளில் எல்லாம், ஆடிப்பாடி மகிழ்ந்து வந்தனர். இதனால் இருவரும் காதல் கொண்டனர். பொருள் தேடச் சென்ற பாணன் ஊர் திரும்பவில்லை. வயது செல்லச் செல்ல ஔவை முதுமை அடைந்தாள்.

ஒரு நாள் ஔவையார் அதியமான் அரண்மனைக்குச் சென்றார். கையில் இருந்த தடாரியை மூங்கில் கோலால் அடித்து பாடினார். அதியமானும் அரசியும், வெளியே வந்து ஔவையை அன்புடன் வரவேற்றனர். ஔவையாருக்கான பணிவிடைகள், விருந்துகள் யாவும் இனிது நடந்தன. அரசனின் வேண்டுதலைத் தட்டாது, சில பல நாட்கள் அரண்மனையிலேயே ஔவையார் தங்கிவிட்டார். காட்டிற்கு வேட்டையாடச் சென்ற அதியமான், தான் பறித்து வந்த ஒரு கரு நெல்லிக்கனியை, ஔவையாரிடம் கொடுத்து, உண்ணுமாறு பணிவாக வேண்டினான். ஔவையே! நீங்கள் இதை அருந்தினால் நூறு ஆண்டுகட்கு மேல் நோய் நொடி இன்றி வாழ முடியும், இனிய பாமாலை புனைய முடியும், என்று அன்பு மேலீட்டால் பணிந்தான்.

அதியமான் திருக்கோவலூர் மீது படை எடுத்து, வெற்றியும் கண்டான். இருந்த போதும் திருக்கோவலூர்ப் படை எடுப்பால் ஏற்பட்ட அழிவை எண்ணி, காஞ்சி மீது படை எடுக்க அதியமான் விரும்பவில்லை. ஆகவே தன்னுடைய அமைச்சர்களுடனும், ஔவையாருடனும் ஆலோசனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த பின், நாவன்மை சாணக்கியம் (தந்திரம்) மிகுந்த ஔவையாரையே, தொண்டமானிடம் தூது அனுப்பி, போரைத் தவிர்த்தான். தகடூர் போரில் அதியமான், சேரனின்வேல் மார்பில் பாய, தேரில் இருந்து வீழ்ந்து இறந்தான். அதியமான் மறைந்த பின்னர், ஔவையார் மிகுந்த கவலையுடன், பறம்பு மலைக்குச் சென்று, முல்லைக்கு தேரீந்த பாரி வள்ளலை மனமார வாழ்த்திப் பாடினார். பாரியும், புலவர் கபிலரும், பாரி மகளிர் அங்கவையும் சங்கவையும் ஔவையை மிக்க அன்புடன் வரவேற்றனர். பறம்பு மலையிலிருந்து குருவிகள் காலையில் பறந்து போய், மாலையில் செந்நெல் கதிர்களோடு திரும்பி வருவதை இனிமையாக ஔவையார் பாடினார், பாரி ஔவைக்கு பொற்கிழி பரிசாகத் தந்து மனமிக மகிழ்ந்தான். ஔவையார் விடை பெற்றுச் செல்ல: அன்னையை இழந்த எங்களுக்கு நீங்கள் அன்னையாக இருக்க வேண்டும், என்றனர் பாரி மகளிர், பாரி மகளிர் இருவரையும் ஔவையார் திருக்கோவலூருக்கு அழைத்துச் சென்று, மலையமான் தெய்வீகன் என்பானுக்கு மணம் முடித்து வைத்தார்.

ஒரு நாள் ஔவையார் உச்சி வெய்யிலில் பழையனூர் வந்தார். ஏழை உழவன் காரி என்பவன் ஔவையைக் கண்டதும் "நீங்கள் தான் தமிழ் மூதாட்டி என நினைக்கிறேன் தாயே! முதலில் எனது கலயத்தில் இருக்கும் கூழை அருந்த வேண்டும் என்று பணிந்தான் காரி. கதிரவன் சாயும் நேரம், ஆகையால் என் இல்லத்தில் தங்கி விருந்து உண்ண வேண்டும் என்றான் காரி.

தென் குமரியில் உள்ள தாழக்குடி என்னும் ஊருக்கு ஔவையார் வர தீடீரென இடி மின்னலுடன் பெருமழை பெய்தது. அதனால் ஔவை மூதாட்டி தெப்பமாக நனைந்து தங்க இடமின்றி, குளிரில் நடுங்கி, சற்றுத் தொலைவில், குடிசை ஒன்றில் இருந்த திணைப்புனத்தைக் காவல் செய்யும் ஆய்மகள், கண்டு கொண்டாள். ஓடோடி வந்து, தன் குடிசைக்கு அழைத்துச் சென்று, உள்ளே போய் கதவின் பின் மறைந்து நின்று, தான் அணிந்திருந்த நீலநிறச்சிற்றாடையை ஔவையாரிடம் நீட்டினாள். பாட்டி, உங்கள் ஈரத்துணிகளைக் கழற்றி, இந்த சிற்றாடையை உடம்பில் சுற்றிக் கொள்ளுங்கள் உங்கள் ஈரத்துணி உலர்ந்ததும், அதை உடுத்திக்கொண்டு வெளியே வருவேன்! என்றாள் ஆய்மகள். ஆய்மகளே உன் அன்பு என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது. பெற்றோரை இழந்து நிற்கும், ஆய்மகளே! நீ திக்கற்றவள் என்று நினையாதே! உனது திருமணத்தை நானே முன் நின்று நடத்துவேன்! என்றார் ஔவையார்.

நள்ளிரவில் உறையூரை அடைந்த ஔவையை, மாறு வேடத்தில் வந்த சோழமன்னன் கண்டு கொண்டான்.ஔவையே! நல்ல நேரத்தில் வந்தீர்கள்! நாளை எனது அரண்மனையில் ராஜசூய யாகம் நடைபெற உளது. நீங்கள் தவறாது வந்து கலந்து கொண்டு எம்மை வாழ்த்த வேண்டும், என்றான், சோழமன்னன். ஔவையார் அந்த யாகத்திற்குச் சென்று மூவேந்தர்களையும் வாழ்த்திப் பாடினார். விருந்து நிறைவு பெற்றதும். ஆய்மகள் தன் மீது காட்டிய அளவிலாத அன்பை விளக்கி, அந்த பெண்ணின் திருமணத்திற்கு, ஔவை வேண்டிய படி, மூவேந்தர்களும் முப்பந்தல் இட்டு, சீர் வரிசைகள் செய்து, ஆய்மகளின் திருமணத்தை நிறைவேற்றினர். அந்த ஊர் இன்றும் முப்பந்தல் என்றே வழங்கி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில், வள்ளுவர் இயற்றிய "முப்பால்" என்னும் நூல் கபிலர் தலைமையில் அரங்கேறியது. நிறைவுற்றதும் ஔவையார் "அணுவைத் துளைத்(து) ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள்" என்று பாராட்டினார். தென்குமரியில் தடாக மலையின் அடிவாரத்தில், ஒரு பாரிய நாவல் மரம். அதன் மேல் இடைச் சிறுவன் அமர்ந்து, நாவற்பழங்களை தின்று கொண்டிருந்தான். மரத்தின் கீழ் அவன் மேய்த்த எருமைகள் படுத்திருந்தன. களைத்து வந்த ஔவைப் பாட்டி, அந்த மரநிழலில் நின்று தம்பி எனக்கும் கொஞ்ச நாவற்பழங்களைப் பறித்துப்போடேன்! என்றாள். கிழவி உனக்கு சுட்ட பழம் வேண்டுமா?, சுடாதபழம் வேண்டுமா? என்று கேட்டான் அந்த இடைச்சிறுவன். ஔவை எனக்கு சுடாத பழமே போடு! நான் மரக்கொப்புகளை குலுக்குகிறேன், நீ சுடாத பழங்களையே எடுத்துக்கொள், கனிந்த கனியாத பழங்களும் உதிர்ந்தன. ஔவை தரையில் மணல் ஒட்டியிருந்த பழங்களை வாயால் ஊதினாள் இடைச் சிறுவனோ என்ன கிழவி சுடாத பழம் கேட்ட நீ இப்போது சுடுகிற பழத்தை தின்கிறாய், நன்றாக ஊதி ஆறிய பின் சாப்பிடு வாய் வெந்து விடப் போகிறது! ஔவை, எல்லாம் தெரிந்த எனக்கு இந்த இடைச் சிறுவனிடம் தோற்றுப் போனேனே! அற்புதம் ஔவையே! அற்புதம். நாவற் பழத்தில் மணல் ஒட்டி இருந்தமை, அந்த மணலை அகற்றி உண்ணுமாறு இடைச்சிறுவன் வேடத்தில் வந்த முருகப் பெருமான் ஔவையை வேண்டியமையை உற்று நோக்கினால், எமது ஆத்மா ஆனது இறைவனை அடைய பந்த பாசங்களில் இருந்து நாம் விடுபட வேண்டும் என்பதே. உன்னைப் பார்த்தால் மாமயில் ஏறும் முருகனாய் தோன்றுகிறது. முருகா! அன்று தந்தைக்கு உபதேசம் செய்தாய்! இன்று தாய்க்கு உபதேசம் செய்ய வந்தாயா? முருகா! என்று இரங்குகிறார் ஔவையார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 'தாழக்குடி' என்னும் ஊரிலிருந்து ஒரு மைல் சென்றால் ஔவையாரின் விருப்பப்படி "முப்பந்தல்" என்று அழைக்கப்படும் ஊர் உள்ளது. நாவல் மரம் சூழ்ந்த இடத்தில் ஔவையாருக்கு ஆலயம் உண்டு. கோயிலின் கருவறையில் கையில் பிரம்புடன் காட்சி தருகிறார் ஔவையார். ஔவையாரின் வலது புறத்தில் முருகன் சிறுவனாக காட்சி தருகிறான். இது 'ஔவையார் அம்மன் கோவில்' என்று வழங்குகிறது. நாகர் கோவிலின் வட கிழக்கில் 10 கி.மீ தொலைவில் பாண்டிய புரத்தில் உள்ள குறத்தி அறையில் ஒரு குடை வரைக் கோவிலும் ஔவையாருக்கு உண்டு.

## 12ம் நூற்றாண்டு ஔவையார்

சோழ நாட்டில் உறையூரில் பிறந்த ஔவையார் மணம் செய்ய மறுத்து, முதுமை அடைந்தார். பின்பு மக்கள் பணியிலும், தமிழ்த் தொண்டிலும், அதியமான் கால ஔவையாரைப் போல ஈடுபட்டதால், மக்கள் இவரையும் ஔவையார் என்றே அழைத்தனர். இவர் கம்பர் காலத்தவர். இவரும் சிற்றூர்களிலும் பேரூர்களிலும் நடைநடையாகச் சென்று தமது அறிவுரைகளை பாட்டாக பாடி வந்தார். ஔவையாரின் பாடல்கள் வலிமையானது, இனிமையானது.

ஔவையார் திருக்கோவலூர் அருகே உள்ள புல்வேளூர் சென்றார். அங்கே பூதன் என்பவனின் வீட்டுத்திண்ணையில் இளைப்பாறிய போது, பூதன் வெளியே வந்து ஔவையாரைக் கண்டு கொண்டான். அன்னையே! இது கால வரை எனது வயலுக்கு கிணற்று நீர் பாயவில்லை. நீங்கள் என் வீட்டில் காலடி வைத்ததும், வயலுக்கு நீர் பாய்கிறது. நீங்கள் என் வீட்டில் உணவருந்திச் செல்ல வேண்டும் என்று பணிந்தான் பூதன். விருந்து உண்ட பின், ஔவையார் பாடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**" வர கரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்**
**முர முர வென்றே புளித்த மோரும் - பரிவுடனே**
**புல் வேளூர்ப் பூதன் புகள் புரிந்(து) இட்ட சோறு**
**எல்லா உலகும் பெறும்"**

வழுதுணங்காய் = கத்தரிக்காய்

வாட்டு = துவட்டல்

பிறிதொரு நாள் ஔவையார் ஒரு வீட்டின் தெருத் திண்ணையில் அமர்ந்திருந்தார். வெளியில் இருந்து வந்த வீட்டுக்காரன், ஔவையைக் கண்டு ஓடோடி உள்ளே சென்றான் அவன் மனைவியோ மற்றவர்க்கு ஈயாதவள் அதனால் அவளை சம்மதிக்க வைக்க அவன் அவளின் தலை வாரி ஈர் பேன் எடுத்தான். அவளோ என்றைக்கும் இல்லாத திருநாளாக இன்று இருக்கிறதே! என்றாள். கணவனோ ஔவையார் பசியோடு திண்ணையில் இருக்கிறார். அவருக்கு விருந்து படைக்க வேண்டும் என்றான். என்ன சொல்கிறீர்கள் விருந்தா இதோ என்று கணவனுக்கு சுளகால் ஓங்கினாள்! இந்தக் காட்சியை திண்ணையில் இருந்து பார்த்த ஔவையார், வெளியே வந்த கணவனைப் பார்த்து பாடுகிறாள் ஔவை.

**" இருந்து முகம் திருத்தி ஈரோடு பேன் வாங்கி**
**விருந்து வந்ததென்று விளம்ப - வருந்தி மிக**
**ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்**
**சாடினாள் ஓடோடத் தான்"**

முறம் = சுளகு
குல்லம்

அப்போது அவளிடம் இருந்து தப்ப என்ன வழி என்றான் கணவன்." கூறாமல் சந்நியாசம் கொள்" என்றாள் ஔவை.

## 16 ம் நூற்றாண்டு ஔவையார்

சோழ நாட்டின், உறையூரில், ஒரு சோலையில் புலவர்கள் கூடி இருந்தனர். ஔவையாரும் அங்கு வந்தார். நீங்கள் அனைவரும் குலோத்துங்கன் அவைப் புலவரல்லவா? ஏன் உங்கள் முகம் வாடி இருக்கிறது? நாங்கள் எல்லோரும் சேர்ந்து 4 கோடிப் பாடல்கள், நாளை காலைக்குள் பாட வேண்டும் இது அரசர் ஆணை. எப்படிப் பாடுவது என்று விழித்துக்கொண்டிருக்கிறோம். மறு நாள் காலை, புலவர்களை அழைத்துக் கொண்டு, மன்னன் அவைக்கு ஔவையார் சென்றார். அரச சபையில் ஔவையார்

**"வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோல் உயரும், கோல் உயர கோன் உயரும்"** என்று பாடினார் ஔவையார். அரசன் குலோத்துங்கன், புலவர்களே! அற்புதம், அமருங்கள் நான்கு கோடிப் பாடல்களையும் பாடிக் கொண்டு வந்து விட்டீர்களே! வாருங்கள் விருந்து உண்போம் ஔவையே! தங்களை மெச்சி பெருமதிப்புள்ள சேலையை அரசி தருவாள். மன்னா நான் உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம், எனவே எனக்கு நான்கு முழ நூற்சேலையே போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிய மன்னன் ஔவையே! காலத்தை வென்று வாழப் போகும் உங்கள் பாடல்கட்கு எனது அன்புக் காணிக்கையை ஏற்றுக்கொள்ளுங்கள். மன்னா கூழுக்குப் பாடும் எனக்கு பொற்குவியல் எதற்கு? ஏழைப்புலவர்கட்கு எல்லாவற்றையும் பகிர்ந்து கொடுங்கள். பின்பு பாண்டியன், ஔவையாரை தமிழ்ச் சங்கத்திற்கு அழைத்துச் சென்று புலவர் மத்தியில் அமரச் செய்தான். ஔவை ஒரு சேய்க்குத் தாயனவள் இல்லை, சமூகத்திற்கே தாயானவள்.

ஆத்தி மலர் மாலை அணிந்த சிவபெருமானுக்கு ஆத்திசூடியைப் பாடிமுடித்தார். "கொன்றை வேந்தன்" என்ற நூலுக்கும், கொன்றை மலர் மாலை அணிந்த சிவபெருமானின் பெயரை வைத்துப் பாடினார். சிறுவர்க்காக "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று பாமாலை புனைகிறார் ஔவையார்.

சமூக ஏற்றத் தாழ்வுகள் நீங்க " சாதி இரண்டொழிய வேறில்லை" என்றும் "இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்" என்று இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னையே பாடிவைத்தார் ஔவையார்.

இறுதி ஆசையாக கயிலை சென்று சிவபெருமானை வழிபட விரும்பி அதற்கு முன்னதாக விநாயகப் பெருமானை வணங்குகிறார்.

**" சீதக் களபச் செந்தாமரைப்பூம்**
**பாதச் சிலம்பு பல இசை பாடச்**
**சொற் பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான**
**அற்புதம் நின்ற கற்பகக் களிறே!**
**தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட**
**வித்தக விநாயக விரைகழல் சரணே!**

தஞ்சை மாவட்டம் திருவிடும் பாவனம் என்னும் ஊரின் அருகில் உள்ள துளசியார் பட்டிணம் என்ற ஊரில் ஔவையாருக்கு பழைய கோயில் ஒன்று உளது.

ஔவையார் என்ற பெயரில், மூன்று பெண் புலவர்கள் தமிழகத்தில் வாழ்ந்தனர், என ஆய்வாளர் கருதுகின்றனர். முதலாமவர் சங்க காலத்தவர் புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய நூல்களில் ஔவையாரின் 59 பாடல்கள் உள்ளன. இரண்டாவது ஔவையார் கம்பர் காலத்தவர். தனிப் பாடற் திரட்டில் ஔவையார் பாடிய 71 பாக்கள் உள்ளன "ஔவையார் குறள்" என்ற தத்துவ ஞான நூலில் 310 குறள்கள் உள்ளன. இவை யோகம் பற்றியவை மூன்றாவது ஔவையார் அதிவீரராம பாண்டியன் வாழ்ந்த 16ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். மூன்றாம் ஔவையார் பாடியது ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகியவை ஆகும். இவற்றில் 273 பாடல்கள் உளது. இவை பள்ளிச் சிறார் அவசியம் கற்க வேண்டியவை. ஔவையார் பாடிய ஒவ்வொரு பாட்டிலும் கருத்து இருக்கும், கற்பனை இருக்கும். உண்மை இருக்கும், உயர்ந்த அறிவு இருக்கும்.

**தொகுத்து எழுத உதவிய நூல்கள்**
1) மா. வழித்துணைவன் – சிங்கப்பூர் – அவ்வையார்
2) வித்துவான் எம். நாராயண வேலுப்பிள்ளை ஔவையார் வாழ்வும் வாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராணங்கள்

பொ. சிவப்பிரகாசம்
கொழும்புத்துறை

திருச்சிற்றம்பலம்

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை உணர்ந்திலேன் யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தி அன்றோ

திருச்சிற்றம்பலம்

– கந்தபுராணம்

## அறிமுகம்

நால் வேதம், ஆறங்கம்,பதினென் புராணங்கள், இருபத்தெட்டு ஆகமங்கள், ஆயகலைகள், அறுபத்தி நான்கு என்ற இவைகள், எமது நாட்டின் கல்விச் சிறப்பை, கலைப்பெருமையை, ஆத்மீக வளர்ச்சியை, பண்பாட்டுக் கோலங்களை நிலை நாட்டுவன ஆகும். தொன்று தொட்டு நிலவி வரும் பதினென் புராணங்களுக்குத் துணையாக நிற்பவை அளவிலாத புராணங்கள். இவற்றில் சிறந்து நிற்பவை ஒரு சிலவே. பதினென் புராணங்கள் வேத வியாசரால் தொகுக்கப்பட்டன. புராணங்களின் நோக்கம், வேதங்களின் உபதேசங்களை விரிவாக்குதலாகும். பதினென் புராணங்கள் வருமாறு.

| | |
|---|---|
| விஷ்ணு புராணம் | மார்கண்டேய புராணம் |
| நாரத புராண... | பவிஸ்வ புராணம் |
| பத்ம புராண | வாமன புராணம் |
| கருட புராணம் | சிவபுராணம் |
| வராக புராணம் | லிங்க புராணம் |
| பாகவத புராணம் | கந்த புராணம் |
| பிரம்ம புராணம் | அக்கினி புராணம் |
| பிரம்ம வைவர்த புராணம் | மச்ச புராணம் |
| பிரமானந்த புராணம் | கூர்ம புராணம் |

சிவாகமங்கள் இருபத்தெட்டு. இவை ஆன்மாக்களின் பாசங்களை நீங்கச் செய்து முத்திப் பேற்றை, அருளுவது ஆகும். 28 ஆகமங்களில் 10 ஆகமங்கள் சிவபேதங்களாகும். 18 ஆகமங்கள் ருத்திர பேதங்களாகும்.

இலக்கியச் சுவையும், பக்திச் சிறப்பும், சொல்வளமும், பொருள் நயமும் நிறைந்தது இவையே! தமிழில் புராணங்கள் என்பவற்றிற்கு அநாதி முறையான பழைய கதைகள் என்பதே பொருள். சிவபுராணம் என்பதற்கு திருவாசக உரை ஆசிரியர் சிவகதை எனக் கூறியதை அறிஞர் உலகம் ஏற்றுக் கொள்ளும் என்பதில் ஐயம் இல்லை. என்றாலும் இவை வரலாற்றுக் காலத்திற்கு முன்பே இந்த நாட்டு மக்களின் வாழ்க்கை முறையை இவர்களின் பண்பாட்டை உய்த்து உணர்த்தி நிற்கிறது. "புராணங்களை வெறும் புனைகதைகளாக மட்டுமே கருதாமல், வரலாற்று நிகழ்வை, வெளிப்படுத்தும் இலக்கிய ஆவணமாகக் கருத வேண்டும் என்கிறார் வங்கத்துறவி சுவாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூமியாகிய ஈழத்திருநாட்டில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், திருச்செந்தூர் புராணம் ஆகிய புராணங்களும் படித்துப் பண்ணோடு பயன்சொல்லும் முறை இருந்து வருவது மனநிறைவைத் தருகிறது. புராணக் கதைளை ஆங்கில நூல்வல்லார் (Myths) என்பர்.

## கந்தபுராணம்

வடமொழியிலிருந்த கந்தபுராணத்தை தமிழில் அருளியவர், அந்தணரான கச்சியப்பசிவாச்சாரியார் ஆவர். கந்தபுராணம் தோன்றிய இடம் காஞ்சிபுரம் ஆகும். புகுந்த இடமோ, பயலுமிடமோ, செந்தமிழ் வல்ல யாழ்ப்பாணமாகும். கச்சியப்பர், செவ்வேளின் கதையை மிகவும் திறம்பட தமிழ்நாட்டிற்கு ஏற்றவாறு தமிழ் கலாச்சாரத்திற்கு அமைய, 10,345 விருத்தப்பாக்களாக பாடினார். ஆறுகாண்டங்களாக பகுத்து பாடினார். தெளிந்த நூற்புலமையும், தெள்ளிய நடையும் நூலெங்கும் மேலோங்கி நிற்கிறது. நூலில் பல இடங்களில் சைவசித்தாந்தக் கொள்கையை மிகச் சுருக்கமாகவும், தெளிவாகவும் பாடி இருப்பது, கச்சியப்பரின் ஆழமான சைவசித்தாந்த அறிவைப் புலப்படுத்துகிறது.

"கந்தபுராணத்தில் சூரபன்மனை வேதாந்தப் பள்ளியில் பயிலும் நன் மாணாக்கனாகவும் அந்த கொள்கையினை அவன் தன் வாழ்க்கையில் அழுத்திப் பின்பற்றுவோனாகவும் படைத்துக் காட்டி இறுதியில், உறுதிபெற இந்தக் கொள்கை சூரனுக்குத் துணை புரியவில்லை, என்பதையும் கதையில் தத்ரூபமாக விளக்கி, சைவசித்தாந்த நெறியே, பிறநெறிகளிலும் மேலானது. என்பதனை கச்சியப்பர் கந்தபுராணத்தில் வலியுறுத்துகிறார் என்று சென்னைப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறைத் தலைவர் டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர்கள் தனது ஆய்வு மூலமாக தெளிவுபடக் கூறுகிறார்.

## ஏட்டுச்சுவடி

ஏட்டுச் சுவடியாக இருந்த கந்தபுராணத்தை எடுத்து, ஒழுங்குபடுத்தி சரிபார்த்து முதற்பதிப்பாக கி.பி.1869 ல் அச்சு வாகனம் ஏற்றிய பெருமை, யாழ்ப்பாணத்து நல்லை நகர் நாவலர் பெருமானுக்கே உரியது. நாவலரைத் தொடர்ந்து, கந்தபுராண வெளியீடுகளை யாழ்ப்பாணம் செந்திநாத ஐயர், பண்டிதமணி கணவதிப்பிள்ளை சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் ஆகியோரைச் சாரும். தமிழ் நாட்டிலும் பலர் கந்தபுராண வெளியீடுகளை மேற் கொண்டனர். கந்தபுராண படலம் யாழ்ப்பாண ஆலயங்களில் தொடங்கி பூர்த்தியாக பல மாதங்கள் செல்லும்.

## ஞானமார்க்கம்

ஞானத்தை அடையும் மார்க்கத்தை பிரமனின் பிள்ளைகளாகிய சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் ஆகிய நால்வரும் வேதங்கள் முழுவதையும் படித்த பின்பும் மனஅமைதி பெறவில்லை. ஆகையால் அவர்கள் நால்வரும் பரம்பொருளிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமானும் சிவாகமத்தில் உள்ள சரியை, கிரியை, யோகம், என்னும் மூன்று படிகளை மட்டும் போதித்து விட்டு, கல்லால மரநிழலில் போய் எழுந்தருளி "ஞானம் சொல்லால் தெரிவிக்க முடியாதது செயலால் அனுபவத்தால் அறிந்து கொள்ளத்தக்கது" என்று கூறி கண்களை மூடி யோக வடிவில் இருந்து கொண்டார். பிரமனின் புத்திரர்கள் நால்வரும் புரிந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாதவூரடிகள் புராணம்

திருவாதவூரடிகள் புராணம் சிவஞானத்தையும் சைவ ஒழுக்கத்தையும், வாதவூர்த் தேவரின் திவ்விய சரித்திரத்தின் ஊடாக , தெளிவுறுத்தும் ஞானக் கருவூலம் ஆகும். சைவ ஆலயங்கள் அனைத்திலும் மார்கழி மாதம் இடம் பெறும் திருவெம்பாவைப் பூஜைகளின் பின் திருவாதவூரடிகள் புராணம் படித்து பயன் சொல்லும் அரிய மரபு யாழ்ப்பாணக் கிராமங்கள் தோறும் இன்றுங் காணமுடியும். 543 பாக்களை உள்ளடக்கியது இந்த புராணம். இந்த சிவ பூமியில் அதிகாலையில் துயில் நீங்கி, நீராடி, நீறணிந்து ஆசாரசீலராய், விருப்பொடு, சிவாலயம் செல்வது வழக்கம். திருவாதவூர்ப் புராணத்தில் மண்சுமந்த சரிதத்தில் வரும் பாக்கள் அனைத்தும் மிகவும் தித்திப்பானவை, இருந்தபோதும், ஒரு பாவின் இனிமையை பார்ப்போம்.

**"மைந்த நீ யெனக்கிங் காளாய்**
**வருகென முன்னர்க் கூலி**
**தந்தியேல் வருவ னென்று**
**சாற்றுவு நுகர விப்போ**
**திந்தவா ரமுதம் போலு**
**மினியபிட் டளிப்பே னல்லா**
**வந்திவா யிதனை விற்றே**
**யளிப்பன் கூலி யென்றாள்."**

திருவாதவூரடிகள் புராணம்

**பொருள் :**

மகனே நீ எனக்கு இப்போ கூலியாளாக உடைந்த, வைகை ஆற்றங்கரையின் எனது பங்கை அடைக்க வருவாயாக! என்று செம்மனச் செல்வியானவள் வேண்ட சிவபெருமானான கூலியாளர் : இப்போ நீ எனக்கு முற்கூலி தருவாயாயின் வருவேன் என்று கூற, அதற்கு அம்மையார், நீ உண்ண இப்போது இந்த இனிய பிட்டினைத் தருவேன். இல்லாது போயின், இந்த ஆரமுதம் போலும் பிட்டினை விற்று , சாயுங்காலம் நீ வரும் போது உனது கூலியைத் தருவேன் என்றாள் வந்தியானவள். நுகர – உண்ண

## பெரிய புராணம்

பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம், சேக்கிழார் பெருமானால் இயற்றப்பட்டது. 12ம் திருமுறையாக பெரியபுராணம் வகுக்கப்பட்டுள்ளது. சேக்கிழார் பெருமானுடைய அவதாரத்தலம் குன்றத்தூர் ஆகும். சேக்கிழாருடைய மறுபெயர் அருள் மொழித்தேவராகும். கல்வி, கேள்வி அறிவுகளில் சிறந்து விளங்கிய சேக்கிழாரை அநபாய சோழன் என்பான் அழைத்து. அவருக்கு "உத்தம சோழப் பல்லவன்" என்ற பட்டத்தை வழங்கி, பெருஞ்செல்வத்தையும் வழங்கி கௌரவித்தான். சேக்கிழார் பெருமானும் அந்த பெருஞ் செல்வத்தைக் கொண்டு கும்பகோணத்துக்கு அருகில் உள்ள குன்றத்தூரில், ஒரு சிவாலயத்தை அமைத்தார்.

அரசனின் வேண்டுதலுக்கு இணங்கி பெரிய புராணத்தை ஒரு காப்பியமாக எழுத முற்படும் போது இறைவன் "உலகெல்லாம்" என அடியெடுத்துக் கொடுக்க, இந்த பெரிய புராணத்தை தில்லைத் திருத்தலத்தில் தங்கியிருந்து பதின்மூன்று சருக்கங்களாக பாடி முடித்தார். சேக்கிழார் தாம் பாடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய புராணத்தை கற்றோர் நிறைந்த அவையில் விரிவாக பொருள் கூற ஓர் ஆண்டு சென்றது. அநபாய சோழ மன்னன் பெரியபுராணத்தையும், சேக்கிழார் பெருமானையும் அரச மரியாதையுடன் யானை மீது ஏற்றி, தான் பின் இருந்து சாமரை வீசி ஊர்வலம் வந்து கௌரவித்தான். சேக்கிழார் வாழ்ந்த காலம் கி.பி. 12 ம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும்.

**பூசலார்**

தொண்டை நாடு எனும் பழம் பதியில் உள்ளது திருநின்றவூர். வேதமும் ஆகமும் கற்றுணர்ந்த மறையவர் நிறைந்து வாழ்ந்த பேரூரில் பூசலநாயனார் தோன்றினார். ஆகம முறைப்படி, இறைவனுக்கு ஓர் ஆலயம் அமைக்க வேண்டும், என்று பூசலார் பெரிதும் விரும்பினார்.
ஓர் ஆலயம் அமைப்பதென்றால் பொன்னும் பொருளும் பெருஞ்செல்வமும் நிறைய வேண்டுமே! பூசலார் குபேரசெல்வம் படைத்தவரா? பெருஞ்செல்வத்தை தேட முடியாமல், அல்லும்,பகலும் அல்லலுற்றார், பூசலார். திருக்கோயில் எடுக்க நினைந்த தம்முடைய முடிவில் சிறிதும் தளர்வுறாமல், திடமாக இருந்தார் பூசல நாயனார். தமது மனதுக்குள்ளேயே ஆலயம் அமைக்க ஆவன செய்தார்.

**"தூபியும் நட்டு மிக்க சுதையுநல்வினையுஞ் செய்து**
**கூவலும் அமைத்து மாடு கோயில் சூழ் மதிலும் போக்கி**
**வாவியுந் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்து மன்னுந்**
**தாபரஞ் சிவனுக் கேற்க விதித்த நாள் சாரு நாளில்"**

–பெரியபுராணம்

ஆலயம் அமைப்பதென்றால் பெருநிலம், ஆள்அணி, சிற்பிகள், தேவதச்சர், செங்கல் என பலவும் வேண்டுமே! பூசலார் தாம் நினைத்த திருப்பணியில் சிறிதும் தளர்வுறாமல் சிறிது சிறிதாக முயன்று திருமஞ்சன நாளையும் குறித்து விட்டார் பூசலார்.

**பல்லவன்**

இவை இவ்வண்ணம் இருக்க, காஞ்சிபுரத்தில் கைலாசநாதர் கோவிலை பல இலட்ச ரூபா செலவு செய்து, உலகமே வியக்கின்ற வகையில், தாம் கட்டிய ஆலயத்திற்கு குடமுழுக்கு செய்ய நாளும் நிச்சயித்தான் மாமன்னன் இராஜசிம்ம பல்லவன். பூசலார் குறித்த நாளும் இராஜசிம்மன் நிச்சயித்த சுப நாளும் ஒன்றாகவே இருந்தன. இதனால் சிவபெருமான், பல்லவன் கனவில் தோன்றி "பல்லவா, நீ உன்னுடைய ஆலய குடமுழுக்கை பிறிதொரு நாளுக்கு தள்ளிவை" என்று கூறி மறைந்தான்.

**"நின் றவூர்ப் பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த**
**நன் றுநீ டால யத்துள் நாளை நாம் புகுவோம் நீ இங்**
**கொன்றிய செயலை நாளை ஒழிந்து பின் கொள்வாய் "**

என்று கொன்றைவார் சடையார், தொண்டர் கோயில் கொண்டருளப் போந்தார்.

சிவபெருமான் பல்லவன் கனவில் தோன்றி கூறியதால், வியப்பெய்திய மன்னன், இறைவன் விரும்பிக் குடிபுகும், அந்த பூசலார் கோவிலைக் காண, குளிர்ந்த பெருஞ்சோலை சூழ்ந்த திருநின்றவூர் வந்து சேர்ந்தான். அங்கே ஆலயம் எதுவும் அமையாமை கண்டு வியப்புற்று, அந்த பூசலாரை தம்முன் அழைத்து வர விரும்பாத மாமன்னன், பூசலார் திருமுன் சென்று "ஐயனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கள் அமைத்த ஆலயத்தில் இறைவனைத் தாபிக்கின்ற நாள் இன்று என்று அறிந்து உம்மைக் கண்டு அடிபணிய வந்தேன்" என்றான் மாமன்னன் பல்லவன். இறைவன் அருளை எண்ணி வியந்த மாமன்னன், பூசல நாயனாரை நிலமுற வீழ்ந்து அடிபணிந்து சென்றான்.

இராஜசிம்ம பல்லவன், தான் கட்டிய கைலாச நாதர் ஆலயக் கல்வெட்டு ஒன்றில், தன்னை அசரீரி கேட்டவன் என்றே குறித்துள்ளான். தமிழ் நாட்டில் தான் கட்டிய கைலாச நாதர் கோவிலைக் காட்டிலும், ஊர் பேர், தெரியாத ஒருவர், செங்கல்லைக் கூட பயன்படுத்தாமல், மனத்தினால் நெஞ்சில் அமைத்த ஆலயத்தை பெரிதாக மதித்தான் இறைவன் என்று அறியும் போது, எமது மக்களின் இறைபக்தி இமயத்தை தொட்டு நிற்கிறது.

## திருச்செந்தூர் புராணம்

திருச்செந்தூர் புராணத்தை இயற்றியவர் வென்றி மாலைக்கவியரசர். நூற்றி நாலு இனிமையான பாடல்களைக் கொண்டது திருச்செந்தூர் புராணம். திருச்செந்தூர்திருத்தலத்தின் தீர்த்தம் சமுத்திரதீர்த்தம். உரையாசிரியர் யாழ்ப்பாணம் நீர்வேலி ஸ்ரீமத்.ச. சிவப்பிரகாச பண்டிதர். படிக்கப் படிக்க தெவிட்டாத கவிதைகள் ஒரு சிலவற்றை பார்ப்போம்.

**குஞ்சர முழங்கி வருதலுங் குறமான்**
**கொம்புவெம் புள்ளத்த ளாகித்**
**தஞ்சமின் றெனக்கா ரென்றுநின் றேங்கிச்**
**சஞ்சலித் திருகணீர் சோரப்**
**பஞ்சடிக் கமலஞ் சேப்பமென் மருங்குல்**
**பயோதரச் சுமையாற் றாது**
**வஞ்சியிற் றுவண்டு துவண்டு தள் ளாட**
**மறுக்கமுற் றுழலுமப் போழ்தின்"**

–திருச்செந்தூர் புராணம்

**பொருள் : –**

யானை பயங்காரமாக முழங்கி வர, வள்ளியம்மையார், கலங்கிய மனத்தராகி, இன்றெனக்கு புகலிடம் யார், என்று நின்று ஏங்கி, துன்புற்று இரண்டு விழிகளிலும் நீர் வார, பஞ்சு போலும் பாத தாமரைகள் சிவக்க, மெல்லிய இணைமுலைச் சுமை தாங்காது, அசைந்து அசைந்து தளரும் போது

வேறு

**"அந்த வேளை யருவஞ் செய் தான்றருங்**
**கந்த வேளைக்கண் டாள் கண்ட கன்னியு**
**மிந்த வேளை யெனக்கரு ளென்று முன்**
**வந்த வேண்மணி மார்புறக் கட்டினாள்."**

**பொருள் : –**

அந்த நேரத்தில், அழகிய காமனை அருபீயாக்கியவர், பெற்ற கந்தப் பெருமானை தன் எதிரே கண்டாள். கண்ட கன்னியும், முன் வந்து, இந்த வேளை எனக்கு அருளுக! என்று கந்த வேளின் திருமார்பில் இரு தனங்களும் பொருந்தத் தழுவினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிளையாடற் புராணம்

திருவிளையாடற்புராணத்தை " திரு ஆலவாய் மான்மியம்" என்றுங் கூறுவர். மான்மியம் என்றால் மகிமை எனப் பொருள்படும். சிவபெருமான் செய்த 64 திருவிளையாடல்களை தத்ரூபமாக சுவையாகத் தருகிறது திருவிளையாடற்புராணம். அங்கையற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலயவாய் அண்ணல் சோமசுந்தரக்கடவுள். திருவிளையாடற்புராணத்தை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர். காலத்தாற் பிந்தியது என்றாலும் பக்தி, சொல் அழகு, கவிநயம், பொருள் ஆழம் மிக்கது. திருவிளையாடற் புராணம் முதலில் முருகப் பெருமானால் அகத்திய முனிவர்க்கு அறிவிக்கப்பட்டது. இந்த புராணம் மதுரைக்காண்டம், கூடற்காண்டம், திருஆலவாய்க் காண்டம் என மூன்று காண்டங்களாக 3,363 பாடல்களைக் கொண்டது. திருஆலவாய் மான்மியம் சமய, இலக்கிய வரலாறுகளை உள்ளடக்கியது. சிவபெருமான் அருளிய அற்புதச் செயல்கள் அவரது திருவிளையாடல்கள், அரசர்கள், அடியார்கள், பக்தர்கள், பறவைகள், விலங்குகள் அனைத்திற்கும் அருள்பாலித்த செயல்களை எடுத்துக் கூறுகிறது. மாநகர் மதுரையை புகழும் புராணமாக திருவிளையாடற்புராணம் அமைகிறது. வைகை நதியால் வளம் நிறைந்தது பாண்டி நாடு. திருவிளையாடற் புராணப்படி, நான் மாடக் கூடலைக் கட்டியவன் குலசேகரபாண்டியன் என்கிறார் துடிசைக்கிழார்.

## கால்மாறி ஆடினார்

இராஜசேகர பாண்டியன் நடனக் கலையை முயன்று கற்றான். அரசனின் உடலில் சோர்வு களைப்பு வலியும் ஏற்பட்டு தளர்ந்தது உடல். மதுரையில் வெள்ளி அம்பலத்தில் ஒரு காலைத்தூக்கியவாறு, நடராசப் பெருமான் நிற்கிறாரே! அவரது கால் வலிக்குமே! என்று வருந்தினான் பாண்டிய மன்னன். வெள்ளி அம்பலத்தில் இடை விடாமல் ஆடுகின்ற இறைவனுக்கும் என்னைப் போன்று அயர்வு ஏற்படுமே! பிரம்ம, விஷ்ணுகளும், காணப்பெறாத திருவடிகளில் ஒன்று மட்டும் தொடர்ந்து ஆடிக் கொண்டிருக்கிறதே! என்று பலவாறு சிந்தித்து, இரவு பகலாக துன்பத்தில் உழன்றான் இராஜசேகர பாண்டியன்.

ஒரு மகாசிவராத்திரி நாளன்று வெள்ளி அம்பலத்தில் பேரொளியாக விளங்கும். திவ்விய நடனத்தை தரிசித்து வணங்கினான். சிவாகம விதிப்படி நான்கு சாமப்பூசை செய்த பின்னர், தேவரீரது திருவடியை, கால்மாறி ஆடும் கற்பகத்தை கண்களில் நீர்வார, தனது இரு கைகளையும், தலைமேல் குவித்து "பெருமானே! ஊன்றிய திருவடியை நிலத்தின் மீது ஊன்றி இன்று அடியேன் காணுமாறு கால் மாறி ஆடவேண்டும், அவ்வாறு செய்தால் எளியேனுக்கு தங்களைப்பற்றிய எனது துயர் நீங்கும், இல்லையேல் என் ஆவி துறப்பேன்" என்று பணிந்தான். சிவபெருமானும் அவ்வண்ணமே செய்தார்!. இந்த கால் மாறி ஆடும் கற்பகத்தை, அந்த திருநடனத்தை இன்றும் மதுரையில் காணமுடியும். "இடத்தாள் ஊன்றி நீட்டினான் வலத்தாள் வீசி நிருமலன் மாறி யாடிக்காட்டினான்." கன்னி நாடன் கவலையும் அறவே நீங்கி ஆனந்தமுற்றான், இராஜசேகர பாண்டியன். இந்த காட்சி காண பதஞ்சலியும், புலிக்காலார் என்னும் வியாக்கிரபாதரும் அருகே நிற்கின்றனர்.

## ஆலயங்கள்

முற்காலத்தில் தமிழகத்தில் ஆலயங்கள் யாவும் சமுதாயத்தின் ஆணிவேராக விளங்கியதை திருவொற்றியூர் கல்வெட்டுகளில் காணமுடியும். ஆலயங்கள் ஊரின் கல்விக் கூடமாக , விரிவுரை மண்டபமாக, சித்தமருத்துவக் கூடமாக , அநாதை இல்லமாக , ஆவணக் களறியாக (Registration



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Office)ஆக பசித்தவர்க்கு பசிதீர்க்கும் மண்டபமாக, இருந்ததை அறிய முடிகிறது. மேலும் இறைவனுக்கு மலர் கொய்தல், மாலை தொடுத்தல், அலகிடுதல், திருமுறைகளை பண்ணோடு ஓதுதல், பரதம் பயிலும் இடமாக சுவாமி வீதி வலம் வரும் போது ஆடலும், பாடலும் இடம் பெற்றது. பேராசியரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் ஆலயங்கள் தொடர்ந்தும் சமுதாய மையங்களாக அமைய வேண்டும் என்று பேரவாக் கொள்கிறார்.

இது வரை புராணங்கள், கந்தபுராணம், ஏட்டுச் சுவடி, ஞான மார்க்கம், திருவாதவூரடிகள் புராணம், பூசலாலர், பல்லவன், திருச் செந்தூர் புராணம், திருவிளையாடற்புராணம், கால்மாறி ஆடினார். ஆலயங்கள் ஆகிய தலைப்பில் தொகுத்து உரைத்தோம்.

**தொகுத்து எழுத உதவிய நூல்கள்**


1. சித்திர பெரியபுராணம் – பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்.
2. சித்திரா திருவிளையாடற்புராணம் – டாக்டர் நா. மகாலிங்கம்.
3. திருச்செந்தூர் புராணம் – வென்றி மாலைக் கவியரசர்.
4. கந்தபுராண ஆராய்ச்சி – திரு.ந. இராமலிங்கம்
5. எங்கள் குருநாதன் – திரு. சி. இராமலிங்கம்
6. திருவாதவூரடிகள் புராணம் – திரு.ம. க. வேற்பிள்ளை அவர்கள்.
7. சிறப்படைவோம் – திரு.ந.நகுலேஸ்வரன் ***B.Sc.(PSY) P.G.Dip. (NGO) MGT.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூசலார்



MATHI COLOURS
Nallur 021 2229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org